# இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2022–ஆம் வருடம் மார்ச் மாதம் 31–ஆம் தேதி புதன் கிழமை முற்பகல் 3.15 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 29.03.2022

தலைவர்,
நகர் மன்றம்.

## பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சி அலுவலக ஈப்புகள், பணியாளர்களது வாகனங்கள் நிறுத்த அலுவலகத்தில் மேற்குபுறம் காலியாக உள்ள இடத்தில் G.I. அட்டைகூரை அமைக்கும் பணியினை, தேர்தல் பணிகளின் அவசியம் கருதி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 15–இன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான செலவினம் ரூ. 43542/– மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

(757/22/இ1)

**தீர்மானம் எண். 02**

பதிவு செய்யப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சி அம்மா உணவகத்தில் இட்லி மற்றும் சாதம் செய்யும் எரிவாயு அடுப்பு பழுதடைந்துள்ளதால் அவசர தேவையாக இட்லி செய்ய தேவைப்படும் இட்லி பானை வாங்கிக்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) வாசவி மெட்டல் மார்ட், இராசிபுரம் – ரூ. 5600/–
2) ஸ்ரீ பொன் காளியம்மன் மெட்டல் மார்ட் – ரூ. 5150/–
3) ஸ்ரீ புவனேஸ்வரி மெட்டல் மார்ட், இராசிபுரம் – ரூ. 4920/–

மேற்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண். 3 ஸ்ரீ புவனேஸ்வரி மெட்டல் மார்ட் என்பவரது குறைந்த விலைப்புள்ளியான ரூ. 4920/–ஐ ஏற்கலாம். மன்ற அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ புவனேஸ்வரி மெட்டல் மார்ட் அவர்களுக்கு பணியாணை வழங்கியதையும் அதற்கான செலவுத் தொகை ரூ. 4920/–ஐ வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3652/14/அ1)

**தீர்மானம் எண். 03**

அனுமதிக்கப்பட்டது.

( 3 ) இராசிபுரம் நகராட்சி புதிய அலுவலக கட்டடத்தில் நகர்மன்றத் தலைவர் அறைக்கு தேவையான மேசைகள், அலங்கார நாற்காலி, பார்வையாளர் இருக்கைகள், அலமாரிகள், கதவு முகப்புகள், சாப்பாடு அறை மேசைகள் மற்றும் சன்னல் திரைத்துணிகள் அமைக்க ஆகும் மதிப்பீடு ரூ. 7.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ. 7.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வழங்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1217/22/இ1)

**தீர்மானம் எண். 04**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி புதிய அலுவலக கட்டட மேல் மாடியில் நகர்மன்றக் கூடத்திற்கு தேவையான மன்றத் தலைவர் அலங்கார நாற்காலி, அலுவலர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கான நாற்காலிகள், மேசைகள், மேடை அமைப்புகள், அறை முகப்பு பெயர் பலகைகள் மற்றும் வர்ணப்பூச்சு உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீடு ரூ. 9.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ. 9.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(1216/22/இ1)

**தீர்மானம் எண். 05**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021–22 (நகர்ப்புறம்) இன்கீழ், முத்துக்காளிப்பட்டி தகன மேடையில் பிரதான மற்றும் குறுக்கு சாலைகளில் பேவர் பிளாக் சாலை அமைக்கவும், வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் இறுதிச்சடங்கு கொட்டகை அமைக்கவும் ரூ. 36.75 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரக் கட்டணம் ரூ. 6300/– சேலம் மாலைமுரசு நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

ஒப்பந்தப்புள்ளி விளம்பரக் கட்டணம் ரூ. 6300/– சேலம் மாலைமுரசு நாளேட்டிற்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3877/21/இ1)

**தீர்மானம் எண். 06**

அனுமதிக்கப்பட்டது

**(6)** இராசிபுரம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்களின் தலைமையில் இராசிபுரம் நகராட்சிப் பகுதியிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுடன் கலந்துரையாடல் கூட்டம் **08.03.2022**–ஆம் தேதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டது. மேற்படி கலந்தாய்வு கூட்டத்திற்கான நோட்டீஸ் மற்றும் பேனர் தயார் செய்த வகையில் உத்தேச செலவினம் ரூ. **10000/–**க்கு நகர்மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) விழா நடத்துவதன் அவசர அவசியம் கருதி பிரிவு **15**–இன்கீழ் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) உத்தேச செலவினம் ரூ. **10000/–** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1261/22/எச்1)**

**தீர்மானம் எண். 07**

அனுமதிக்கப்பட்டது

**(7)** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவில் வளர்ச்சியடைந்த கொசுக்களை அழிக்க பயன்படுத்தும் இயந்திரம் **2** மட்டுமே உள்ளது. புகை மருந்து இயந்திரம் குறைவாக உள்ளதால் **27** வார்டுகளிலும் தொடர்ச்சியாக புகை மருந்து தெளிக்க **2** Pulse fog machine (Pulse jet Engine, Insecticide Tank capacity – 4.5 lit, Petrol capacity – 1 lit.) Empty weight 11 Kg., Length : 145mm, width : 280mm, Height : 340mm) அளவுகளில் வாங்குவதற்கும், ஒப்பந்தப்புள்ளிக் கோரி நடவடிக்கை மேற்க்கொள்ளவும், உத்தேச செலவினம் ரூ. **150000/–**க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) பொது சுகாதார டெங்கு, மலேரியா நோய் தடுப்பின் அவசர அவசியம் கருதி, நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினம் ரூ. **150000/–** நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4247/21/எச்1)**

**தீர்மானம் எண். 08**

அனுமதிக்கப்பட்டது

**(8)** இராசிபுரம் நகராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து பெரிய சாக்கடைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் மண் நிரம்பி உள்ளது. மேற்படி மண்களை தூர் வாருவதற்கு JCB இயந்திரம் வாடகைக்கும், டிராக்டர் ஒன்று நாள் வாடகைக்கும் எடுத்து பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே, சாக்கடைகளிலுள்ள மண்களை தூர் வாருவதற்கு JCB – 150 மணி நேர வாடகைக்கும் டிராக்டர் தேவையான நாட்களுக்கு வாடகைக்கு எடுத்துக் கொள்வதற்கும் உத்தேச செலவினம் ரூ. இரண்டு லட்சத்திற்கும், ஒப்பந்தப்புள்ளிக் கோரி நடவடிக்கை மேற்க்கொள்ளவும் நகர் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) ஒப்பந்தப்புள்ளிக் கோரி JCB வாடகைக்கும், டிராக்டர் நாள் வாடகைக்கும் வைத்து சாக்கடைகளில் தூர் வார நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

2) உத்தேச செலவினம் ரூ. இரண்டு லட்சம் நகராட்சி பொது நிதி அல்லது பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1222/21/எச்1)

**தீர்மானம் எண். 09**

அனுமதிக்கப்பட்டது

**( 9 )** இராசிபுரம் நகராட்சியின் 2021–22–ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு மற்றும் 2022–23–ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(4685/21/பி1)

**தீர்மானம் எண். 10**

ஒப்புதலுக்கு அனுமதி வழங்கப்பட்டது

**( 10 )** இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோக பராமரிப்பு வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA2 நாள் 02.10.2021–இல் ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி குடிநீர் வழங்கல் பணி செய்ய கீழ்கண்டப் பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

**Format-I**

| Water Supply | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| To Engage / outsource the Man Power to Operate & Maintain the Water Supply system | | | | | | |
| Sl. No. | Man power required | Norms for man power | No. of OHT | Requirement as per norms | Permanent staff available as on date | Balance required staff |
| 1 | Over head Tank Maintenance Assistant | Two numbers for 2LL to 5 LL OHTs Three numbers for above 5 LL OHTs | 5 LL – 1<br>6 LL – 1<br>7.5 – 1<br>9 LL –1<br>10 LL– 1 | 5 LL – 2<br>6 LL – 3<br>7.5 – 3<br>9 LL –3<br>10 LL– 3 | 0 | 14 |

மேற்காணும் அளவுகோல்படி வெளிக்கொணர்வு முகமை மூலம் குடிநீர் வழங்கல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நகராட்சி குடிநீர் விநியோக பகிர்மான குழாயின் நீளம் சுமார் 65 கி.மீ நீளம் உள்ளது. குடிநீர் விநியோக பகிர்மான குழாய்களில் ஏற்படும் கசிவுகள், உடைப்புகள், வால்வு பராமரிப்பு, குடிநீர் தொட்டி சுத்தம் செய்தல் பணிகளுக்கு தினசரி 2 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

மேற்கண்டப் பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்த நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கும் வரை தற்காலிகமாக மாவட்ட அரசிதழ் விலைக்குட்பட்டு ஆண்கள் சுய உதவிக் குழு மூலம் பணி செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் இதற்கான மாத செலவுத் தொகை ரூ. **2,16,000/– (16** x **30** x **450** = 2,16,000) மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வழங்கும் வரை மேற்படி குழு மூலம் பணிபுரிய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு :**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வழங்கும் வரை மேற்படி குழு மூலம் பணிபுரிய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(1817/21/இ2)**

**தீர்மானம் எண். 11**

அனுமதிக்கப்பட்டது

**( 11 )** இராசிபுரம் நகராட்சிப் பகுதியிலுள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய்களிலுள்ள கீழ்க்காணும் சுலீஸ் வால்வுகளின் செக்நட் மற்றும் ராடு பழுது ஏற்படும்போது சரிசெய்யவும் **5** மேல்நிலைத் தொட்டிகளின் டெலிவரி மற்றும் Inlet Valve செக்நட் பழுதுகள் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. **2.50** இலட்சமும், பழுதடைந்த வால்வு செக்நட் தேவைக்கு தகுந்தவாறு கீழ்காணும் அளவுகளில் வாங்கி பராமரிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) **100** எம்எம் சுலீஸ் வால்வு செக்நட் பிராஸ் மெட்டல் வாங்கி செய்ய
2) **150** எம்எம் சுலீஸ் வால்வு செக்நட்
3) **200** எம்எம் சுலீஸ் வால்வு செக்நட்
4) **250** எம்எம் சுலீஸ் வால்வு செக்நட்
5) **300** எம்எம் சுலீஸ் வால்வு செக்நட்
6) **400** எம்எம் சுலீஸ் வால்வு செக்நட்

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தேய்மானம் அடையும் செக்நட் மற்றும் ராடுகளை உடன் சரி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
இ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1260/22/இ2)**

**தீர்மானம் எண். 12**

அனுமதிக்கப்பட்டது

**( 12 )** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 Q 8402-இன் தகுதிக்காலம் **19.01.2022** அன்று முடிவடைந்ததால் இவ்வாகனத்தை கழிவு செய்வதன் பொருட்டு மண்டல துணை இயக்குநர், அரசு தானியங்கி பணிமனை, சேலம் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது. அதன்படி, வாகனத்தை கழிவு செய்ய மண்டல துணை இயக்குநர், அரசு தானியங்கி பணிமனை, சேலம் அவர்களது கடிதம் மூ.மு.செ.மு.ஆ.எண். அ**4/2961/2021**, நாள்

24.01.2022–இல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, ஈப்பு வாகனம் TN 28 Q 8402–யை கழிவு செய்து விற்பனை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

இராசிபுரம் நகராட்சியிலிருந்து குடிநீர் வழங்கும் தலைமை நீரேற்று நிலையம் 55 கி.மீ. தொலைவிலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் 30 கி.மீ. தொலைவிலும், மாவட்ட ஆட்சியரகம் 40 கி.மீ. தொலைவிலும் உள்ளது. குடிநீர் அத்தியாவசியப் பணிகள் காரணமாக அடிக்கடி தலைமை நீரேற்று நிலையம் செல்வதாலும், ஆய்வுக்கூட்டங்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் மற்றும் மாவட்ட ஆட்சியரகத்திற்கு செல்வதாலும் புதிய ஈப்பு தேவையாக உள்ளது. எனவே, இராசிபுரம் நகராட்சிக்கு புதிய ஈப்பு வாகனம் ரூ. 22.53 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

புதிய ஈப்பு வாகனம் வாங்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

TN 28 Q 8402 ஈப்பு வாகனத்தை கழிவு செய்து புதிய ஈப்பு வாகனம் ரூ. 22.53 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(3282/21/இ2)**

**தீர்மானம் எண். 13**

அனுமதிக்கப்பட்டது

(13) இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற திரு ஆர். பெரியசாமி என்பவர் தனக்கு ஓய்வூதியப் பலன்கள் பெறும் வகையில் தினக்கூலிப் பணியாளராக பணிபுரிந்த காலமான 10.05.1996 முதல் 28.02.2006 முடியவுள்ள தினக்கூலிப் பணியாளர் பணிக்காலத்தை கணக்கில் எடுத்து ஓய்வூதியப் பயன்கள் வழங்குமாறு சென்னை, உயர்நீதி மன்றத்தில் வழக்கு

நீதிப்பேராணை எண். 27958 of 2014 தொடர்ந்து வழக்கு நடைபெற்று வருகிறது. தற்போது வழக்கினை ஏற்று நடத்தும் வழக்கறிஞர் திரு ஆர். ரவிச்சந்திரன் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 20000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு :**

1) அரசு வழக்கறிஞர் மூலம் நடத்த மன்றம் அனுமதிக்கலாம்.
2) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழக்கின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4751/14/எச்1)**

**தீர்மானம் எண். 14**

அனுமதிக்கப்பட்டது

(14) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் தீவிர டெங்கு, மலேரியா நோய் கட்டுப்படுத்தும் வகையில் வீடுவீடாக சென்று கொசுப்புழுக்களை அழிக்கவும், சுற்றுப்புறங்களிலுள்ள பொருட்களில் தண்ணீர் தேங்காத வண்ணம் ஆய்வு செய்யவும் 30 DBC பணியாளர்கள், மாவட்ட ஆட்சியர், நாமக்கல் அவர்களின் அரசிதழ் அறிவிக்கையின் அடிப்படை ஊதியத்தில், பணிகளை

மேற்கொள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | மகளிர் சுய உதவிக்குழு பெயர் | நாள் ஒன்றுக்கு பணிநேரம் பணிமேற்கொள்ள 1 நாள் ஊழியம் |
|---|---|---|
| 1. | பாபாஜி மகளிர் குழு, 1, நடு காலனி, இராசிபுரம் | ரூ. 395.10 |
| 2. | ஓம் சக்தி மகளிர் குழு, 17, எல்லப்பத் தெரு, இராசிபுரம் | ரூ. 405.10 |
| 3. | பராசக்தி மகளிர் குழு, 2, வி நகர் ரோடு எண். 1, இராசிபுரம் | ரூ. 415.10 |

மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பாபாஜி மகளிர் குழு விலைப்புள்ளியினை ஏற்று **1–04–2022** முதல் **30–06–2022** வரை மூன்று மாதங்களுக்கு கொசுப்புழு ஒழிப்பு பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(1264/2022/எச்1)**

**தீர்மானம் எண். 15**

அனுமதிக்கப்பட்டது

**(15)** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE ஆட்டோ வாகனம் எண். TN 28 BW 9646 இயக்க முடியாமல் பழுதாகி உள்ளது. மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய மேற்படி TATA ACE வாகனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட டீலர் நாமக்கல், ராஜம் மோட்டார்ஸ் நிறுவனத்தில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் வாகனத்தை ஆய்வு வாகனத்தின் பழுதுகளை சரிசெய்யவும், உதிரி பாகங்கள் மாற்றவும், ஆயில் சர்வீஸ் செய்யவும் உத்தேச செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதுகளை மேற்படி வாகனத்தின் அங்கீகாரம் பெற்ற டீலர் ராஜம் மோட்டார்ஸ், நாமக்கல் நிறுவனத்தில் பழுதுகளை சரிசெய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

1) மேற்படி டாடா ஆக்ஸ் ஆட்டோ வாகனத்தின் பழுதுகளை நாமக்கல், ராஜம் மோட்டார்ஸ் நிறுவனத்தில் சரிசெய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) உத்தேச செலவீனம் ரூ.24,000–க்குள் மேற்படி பழுதுகளை சரிசெய்யவும், பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3) நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(1305/22/இ2)**

**தீர்மானம் எண். 16**

அனுமதிக்கப்பட்டது

**( 16 )** இராசிபுரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட பொதுக்கிணறுகளில் வளர்ந்துள்ள செடிகள் மற்றும் மரங்களை அகற்றி தண்ணீர் மாசுபடாமல் பாதுகாக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/– குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

1. வார்டு எண். 15 – கிருஷ்ணன் கோவில் தெரு
2. வார்டு எண். 27 – புதிய பேருந்து நிலைய மூலை கிணறு
3. வார்டு எண். 26 – ராம் நகர்
4. வார்டு எண். 8 – வி.நகர் ரோடு எண். 17 – பாப்பாத்தி காடு
5. வார்டு எண். 9 – வி.நகர் ரோடு எண். 11 – நகராட்சி நடுநிலைப்பள்ளி
6. வார்டு எண். 4 – வடக்கு காலனி

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்
ஆ) இப்பணியினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1287/22/இ2)**

**தீர்மானம் எண். 17**

அனுமதிக்கப்பட்டது

**( 17 )** இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 17, வி. நகர் ரோடு எண். 17–இல் உள்ள பொதுக் கழிப்பிடத்தின் கழிவு நீர் குழாயை பாதாள சாக்கடையுடன் இணைக்கவும் மேலும் அப்பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தினை நீட்டித்து புதியதாக ஆள்நுழைத்தொட்டி அமைத்து இணைப்பு வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.83000/– குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்
ஆ) இப்பணிக்காண செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1286/2022/இ2)**

**தீர்மானம் எண். 18**

அனுமதிக்கப்பட்டது

**( 18 )** இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய், பொதுக்குழாய், பொதுக்கழிப்பிடக் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்ய தேவையான பொருட்கள் வாங்க வேண்டி 2022–2023ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. தேவையான அடிப்படை பொருட்களை ஒரு மீட்டர் (அ) ஒரு எண்ணிக்கை அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்
ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3377/2022/இ1)**

**தீர்மானம் எண். 19**

அனுமதிக்கப்பட்டது

**( 19 )** இராசிபுரம் நகராட்சி நமக்கு நாமே திட்டத்தின்கீழ் முத்துக்காளிபட்டி தகனமேடை வளாகத்தில் பிரதான மற்றும் குறுக்கு சாலைகளில் பேவர் பிளாக் சாலைகள், வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் இறுதி சடங்கு கொட்டகை அமைத்தல் பணி ரூ.**36.75** இலட்சத்திற்கு **23.03.2022** அன்று வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1. திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரர், மசக்காளிப்பட்டி அஞ்சல்,
இராசிபுரம்– மதிப்பீட்டை விட **0.02**% குறைவு.

2. திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர், **1/202**, மசக்காளிப்பட்டி.
இராசிபுரம் – மதிப்பீட்டை விட**0.42**% அதிகம்.

மதிப்பீட்டை விட **0.02**% குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள திரு.ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.02**% குறைவான திரு.ஆர். பெரியசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**( 1336/2022/இ1)**

**தீர்மானம் எண். 20**

அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது

**( 20 )** இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலிக்க கூடுதல் கணினி வசூல் மையம் ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 42,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ.**42,000/–** மதிப்பீட்டுற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.

**(1327/2022/இ1**

**தீர்மானம் எண். 21**

அனுமதிக்கப்பட்டது

**( 21 )** இராசிபுரம் நகராட்சி செட்டியண்ணன் தெருவில் பழுதடைந்துள்ள சிறுபாலத்திற்கு பதிலாக புதிய சிறு பாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.**75,000/–** க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ. **75,000/–** மதிப்பீட்டுற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(1326/2022/இ1)**

**தீர்மானம் எண். 22**

அனுமதிக்கப்பட்டது

**( 22 )** இராசிபுரம் நகராட்சி அலுவலக கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளதை சரி செய்து புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகின்றது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.

**(1325/2022/இ1)**

**தீர்மானம் எண். 23**

அனுமதிக்கப்பட்டது

**( 23 )** இராசிபுரம் நகராட்சி புதிய நகர்மன்றக் கூடத்திற்கு புதிய மின்கல ஒலிவாங்கி, ஒலிபெருக்கி Amblifier கருவிகள் வாங்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ). ரூ. 1.50 இலட்சம் செலவினத்திற்கு மன்ற அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(1324/2022/இ1)**

**தீர்மானம் எண். 24**

அனுமதிக்கப்பட்டது

**( 24 )** இராசிபுரம் நகராட்சி அலுவலக முதல்மாடியில் உள்ள கழிப்பிடம் பழுதடைந்து தண்ணீர் கசிவு ஏற்படுவதால், அதனை சரிசெய்து புணரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,20,000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ. 1,20,000/– மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(1289/2022/இ1)**

**தீர்மானம் எண். 25**

அனுமதிக்கப்பட்டது

( 25 ) இராசிபுரம் நகராட்சி அறிஞர் அண்ணாசாலை துவக்கப்பள்ளியில் பழுதடைந்துள்ள கட்டடத்தை அகற்றி புதிய கட்டடம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 995000/—க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகின்றது. பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்விநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ. 995000/— மதிப்பீட்டிற்கு நிர்வாகம் அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.

**(3400/2021/இ1)**

**தீர்மானம் எண். 26**

அனுமதிக்கப்பட்டது

( 26 ) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நடுநிலைப்பள்ளியில் அதிக மாணவர்கள் பயில்வதால் கூடுதல் வகுப்பறைகள் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 40.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலியிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.

**(1288/2022/இ1)**

**தீர்மானம் எண். 27**

அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது

( 27 ) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நடுநிலைப்பள்ளியிலுள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால், புதிய கழிப்பிடங்கள் மற்றும் தண்ணீர் தொட்டி கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 9,70,000/— க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்விநிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ. 9,70,000/— மதிப்பீட்டிற்கு நிர்வாகம் அனுமதி வழங்கலாம்.
ஆ). செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(2899/2021/இ1)**

**தீர்மானம் எண். 28**

அனுமதிக்கப்பட்டது

( 28 ) இராசிபுரம் நகராட்சி வி.நகர் நடுநிலைப்பள்ளியில் 460 மாணவ மாணவியர்கள் பயின்று வருவதால், புதிய வகுப்பறைகள் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 40.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ. **40.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ). செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.

**(2899/2021/இ1)**

**தீர்மானம் எண். 29**

அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது

**( 29 )** இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் அரசாணை நிலை எண். **97**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **12.02.2007** மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். **748/2008/**குவ**2**, நாள் **21.09.2009**–இன்படி புதிதாக குடிநீர் இணைப்பு பெறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணம் முந்தைய ஆண்டிலிருந்து 5% உயர்த்தி வசூல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கும் போது சாலை பராமரிப்புக் கட்டணம் கீழ்கண்டுள்ளவாறு 5% **01.04.2022** முதல் உயர்த்தி வசூல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

| வ.எண். | சாலை விவரம் | 01.04.2021 முதல் வசூலிக்கப்படும் கட்டணம் | 01.04.2022 முதல் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| 1 | **கருங்கல் ஜல்லி சாலை** | | |
| | 0.30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 1894/- | ரூ. 1989/- |
| | 0.30 முதல் 0.90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 3069/- | ரூ. 3223/- |
| 2 | **தார் சாலை** | | |
| | 0.30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 4052/- | ரூ. 4255/- |
| | 0.30 முதல் 0.90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 5135/- | ரூ. 5392/- |
| 3 | **சிமெண்ட் சாலை** | | |
| | 0.30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 4677/- | ரூ. 4911/- |
| | 0.30 முதல் 0.90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 5765/- | ரூ. 6054/- |

**அலுவலகக் குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) **01.04.2022** முதல் சாலை பராமரிப்புக் கட்டணம் 5% உயர்வு செய்து வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(1339/2022/இ2)**

**தீர்மானம் எண். 30**

அனுமதிக்கப்பட்டது

**( 30 )** இராசிபுரம் நகராட்சிக்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அரசாணை எண். (நிலை) **44**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **14.03.2022**–இல் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கியதற்கு நன்றி தெரிவிக்க Flex Banner இரண்டு இடங்களில் (புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம்) **30** X 10 அளவில் ஆகும் செலவினம் ரூ. **15400/–**இல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

மேற்படி குடிநீர் திட்டத்தின் விவரத்தினை பொதுமக்கள் அறிந்துகொள்ள நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

1) நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1742/18/இ2)**

**தீர்மானம் எண். 31**

அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது

**( 31 )** இராசிபுரம் நகராட்சிகளில் கொரோனா பாதிப்பு காலக்கட்டங்களில் காலி செய்யப்பட்ட தொழில் நிறுவனங்கள் மற்றும் கடைகள் ஆகியவை **397** இனங்களுக்கு கேட்பு தொகை ரூ.**15,47,219/–** கேட்பில் இருந்து நீக்கம் செய்யாமல் நிலுவையில் உள்ளது. தற்போது நடைமுறையில் இல்லாத தொழில்வரி இனங்களை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** இராசிபுரம் நகராட்சி பகுதிகளில் நடைமுறையில் இல்லாத **397** எண்ணிக்கை கொண்ட தொழில் வரி இனங்களுக்கு கேட்பு ரூ.**15,47,219/–** நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
**(2405/15/அ1)**

**தீர்மானம் எண். 32**

அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது

**( 32 )** இராசிபுரம் நகராட்சியில் உள்ள **27** வார்டுகளில் இடிந்த கட்டிடங்களுக்கு வரி விதிப்புகள் நீக்கம் செய்யாமல் மேற்படி இடங்களில் புதியதாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு புதியதாக வரி விதிப்பு செய்யப்பட்டு நாளது வரை சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி இடத்தில் உள்ள பழைய கட்டிடங்களுக்கான வரிவிதிப்புக்கள் **106** எண்ணிக்கையினை கணினியில் இருந்தது நீக்கம் செய்யவும் மேற்படி வரிவிதிப்புகளின் நிலுவை கேட்புத்தொகை ரூ.**4,68,210/–**ஐ வசூல் கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**(2405/15/அ1)**

**தீர்மானம் எண். 33**

அலுவலக குறிப்பினை ஏற்று தீர்மானிக்கப்பட்டது

**( 33 )** இராசிபுரம் நகராட்சியில் புதியதாக வீடுகள் கட்டப்பட்டு சொத்துவரி விதிக்கப்பட்ட **869** இனங்களுக்கு காலிமனை வரி அலுவலக கேட்பில் இருந்து நீக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. எனவே, **869** காலிமனை வரி விதிப்புகளுக்கான தொகை ரூ.**1266848/–** கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** சொத்துவரி விதிக்கப்பட்ட **869** காலிமனை வரி கேட்பு ரூ.**1266484/–** நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**(2405/15/அ1)**

**தீர்மானம் எண். 34**

அலுவலக குறிப்பினை ஏற்று தீர்மானிக்கப்பட்டது

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.